## இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட புரட்சியாளர்

# சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் புகழ் ஓங்குக!

## நினைவு நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, நவ. 28-

முன்னாள் பிரதமர், சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், "இந்திய வரலாற்றைப் புரட்டிப்போட்ட புரட்சியாளர் எனவும் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக" என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.



மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**இந்திய வரலாற்றைப் புரட்டி போட்ட புரட்சி யாளர் - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக!**

**உயர்கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் - தலைமைப் பொறுப்புகளிலும் நமது திறமையால் சாதனை படைத்து அவருக்கு நன்றி செலுத்து வோம்! சாதிக்கப் பிறந்தவர்களுக்குச் சாதி தடையில்லை என்பதை நிறுவுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; அ.தி.மு.க. ஆட்சியில், டெல்டா மாவட்டங்களை, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என அறிவித்து விட்டதாகத் தோள் தட்டிக் கொண்டார்களே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, அப்படி அறிவிப்பதற்கான எந்தவிதமான பரிந்துரையும், ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்திற்கு வரவில்லை என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு அறிவித்துள்ளது.**

**இந்த அறிவிப்பின் மூலம் அ.தி.மு.க. ஆட்சியின் சாயம் வெளுத்துவிட்டது !**

**இது தொடர்பாக, 'குற்றம் சுமத்துவது கேவலமான அரசியல்' என்று அ.தி.மு.க. ஜெயக்குமார், பொங்கி வழிந்திருக்கிறார்.**

**அறியாமையான - கேவலமான ஆட்சியை நடத்திவிட்டு, கேவலமான அரசியல் என்று கோபம் கொப்பளிக்கக் குதிப்பது, மல்லாந்து படுத்துக்கொண்டு காறி உமிழ்வதற்கு ஒப்பானதுதானே !**

---

### பொற்கிழி - விளையாட்டு உபகரணங்கள் - திருநங்கைகளுக்கு நல உதவிகள் - கல்வி உதவித்தொகை - மூன்று சக்கர வாகனம்- சுழல்நிதி!

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

## மாவட்ட செயலாளர்-அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

சென்னை, நவ.28-

திமுக இளைஞரணி செயலாளர் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் தந்தை பெரியாருக்கு மலர்அஞ்சலி செலுத்தினார்.

அவருக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் மேளதாளம், கரகாட்டம், செண்டை மேளம் முழங்க பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனித நேய உதயநாளை முன்னிட்டு உதயம் -1, உதயத்தால் எல்லாம் விடியும்! கழகத்தால் எதுவும் முடியும்! எனும் தலைப்பில் நலத்திட்டம் வழங்கும் விழா 27.11.2024, புதன்கிழமை காலை 8.00 மணியளவில், சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலையில், க.வினோத் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று கழக மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்கினார்.

மேலும் 250 பள்ளி மாணவ- மாணவியருக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் கல்வி உதவித்தொகை, 375 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.13 ஆயிரம் மதிப்புள்ள விளையாட்டு உபகரணங்கள், 50 சுய உதவி குழுக்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் பணம் மற்றும் புத்தாடைகள், 100 திருநங்கைகளுக்கு தலா ரூ.10 ஆயிரம், மாற்றுத்திறனாளிகள் 10 பேருக்கு மூன்று சக்கர வாகனங்கள் என 1335 பேருக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், இ. பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், வி.சுதாகர், சொ.வேலு, கே.எஸ்.இரவிச்சந்திரன், கோ.ஏகப்பன், கே.எஸ். எம்.நாதன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி. கே.மூர்த்தி, வே.உமாகாந்த், சி.மகேஷ்குமார், பரிதிஇளம்சுருதி, ஐ.சி. எப்.முரளிதரன், எ.நாகராஜன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ். செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ். ராஜசேகர், எஸ்.முரளி, கூ.பி.ஜெயின், வே.வாசு, சரிதா மகேஷ்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுதா தீனதயாளன் மற்றும் எழும்பூர் தெற்கு, வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள், மொய்தின், டால்பின்ஹரி, எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்கள்: தி. தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வட்ட கழக செயலாளர்கள், விஜயகுமார், ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறினர்.

---

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் குழந்தைகளுக்கு வைப்பு நிதி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

## சே.பாலாஜி தலைமை! அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்குகிறார்!

சென்னை, நவ. 28 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனித நேய உதயநாளை முன்னிட்டு உதயம்-3, வருங்காலம் காப்பது வைப்புநிதி! மழலைகளுக்கு வழங்குகிறார் உதயநிதி எனும் தலைப்பில் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் 27.11.2024 அன்று பிறந்த குழந்தைகளுக்கு வைப்பு நிதி 29.11.2024, வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, எழும்பூர், மகப்பேறு மருத்துவமனையில் வழங்கப்படுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், எழும்பூர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்சே.பாலாஜி தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, தயாநிதிமாறன், எம்.பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வி.சுதாகர், சொ. வேலு எம்.சி., கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, அ.நிர்மலாதேவி, பரிதிஇளம்சுருதி எம்.சி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி. தெற்கு பகுதி கழக நிர்வாகிகள்: எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்ன பூரணி, எஸ்.ஜெகதீசன், தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: ஆர்.பாபு (எ) சந்திரசேகரன், எஸ். டால்பின்ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் 27.11.2024 அன்று பிறந்த குழந்தைகளுக்கு வைப்பு நிதியை, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், இந்நிகழ்வில் மேயர் ஆர். பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தா மன், ப.தயாகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல் மற்றும் ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாக லிங்கம், மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், சங்கரிநாராயணன், ப.ரங்க நாதன் எஸ்.மணிமுடி, தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி எம்.சி., வே.உமாகாந்த், சி.மகேஷ்குமார், பரிதி இளம்சுருதி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்கள்: தி.தயாளன், வி. அபாய், சு.மனோகர், ந. பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் வி.விஜயகுமார், ஆர்.பாபு எஸ்.டால்பின்ஹரி, இ. மொய்தீன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

## வேலூர் மாவட்டம்

# மாவட்ட துணைச் செயலாளர் - பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்!

# வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், வேலூர் மாவட்ட துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.பாண்டியன் அவர்கள் வசித்து வரும் அகரம் ஊராட்சி, அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதாலும், அதைப்போலவே பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷர்மிளா ஜெயப்பிரகாஷ் அவர்கள் வசித்து வரும் சின்னசேரி ஊராட்சி குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் பிரிக்கப்பட்டபோது திருப்பத்தூர் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டதாலும், இவர்கள் வகித்து வந்த தத்தமது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அப்பொறுப்புகள் நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

வேலூர் மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 30 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் வேலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர/பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 27.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## சென்னை வடக்கு மாவட்டம்

# தி.மு.க. மீனவர் அணி, வழக்கறிஞர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி. கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, ஆகிய அணிகளின் மாவட்ட அமைப்பாளர் நியமனம் நிறுத்திவைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

27.11.2024 அன்று முரசொலியில் வெளிவந்துள்ள சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. மீனவர் அணி, வழக்கறிஞர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, ஆகிய அணிகளின் மாவட்ட அமைப்பாளர் நியமனம் - சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமை பிரிவுத் தலைவர் நியமனம் மற்றும் சென்னை வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் நியமன அறிக்கை ஆகியவை நிறுத்தி வைக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 27.11.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 28/11/2024 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி திருமண மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள்- முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
**செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**

---

### திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவில்

# செல்போன் டவர்களின் திறனை அதிகரிக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை!



திருவண்ணாமலை, நவ.28-

பிரசித்தி பெற்ற திருவண் ணாமலை அண்ணா மலை யார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழா வரும் 4ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இந்த ஆண்டு தீபத்திரு விழாவில், 40 லட்சத்துக்கும் மேற் பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிலையில், ஒவ்வொரு ஆண்டும் தீபத் திருவிழாவின்போது, செல்போன் மற்றும் இணையதள சிக்னல் கிடைக்காமல் தவிப்பது வழக்கமா உள்ளது. ஒரே நேரத்தில் பல லட்சம் பக்தர்கள் செல்போனை உபயோகிப்பதால் இந்த நெருக்கடி ஏற்படுகிறது.

எனவே, இந்த ஆண்டு நெட்வொர்க் சிக்னல் பிரச்னை ஏற்படாமல் தடுக்க தற்போதுள்ள செல்போன் டவர்களின் திறனை மேம்படுத்த வேண் டும் என ஒன்றிய தகவல் தொடர்பு துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தி யாவிடம், திருவண்ணாமலை தொகுதி திமுக சி.என். அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, ஒன்றிய அமைச்சரிடம், அண்ணாதுரை எம்.பி. அளித்துள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது:

தென்னகத்தின் புகழ் பெற்ற ஆன்மிக தலம் திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயில். இங்கு நடைபெறும் கார்த்திகை தீபத்திருவிழாவில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். தென்னகத்தில் மிக அதிகமான எண்ணிக்கையில் பக்தர்கள் பங்கேற்கும் மிகப்பெரிய விழா கார்த்திகை தீபத்திருவிழாவாகும். லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலை நகரில் திரள்வதால், செல்போன் சிக்னல் கிடைக்காமல் பக்தர்கள் தவிக்கின்றனர்.

மேலும், இணையதள செயல்பாடும் பாதிக்கப்படுகிறது.

எனவே, இந்த ஆண்டு தீபத்திரு விழாவை முன்னிட்டு திருவண்ணாமலையில் உள்ள பிஎஸ்என் எல் மற்றும் தனியார் செல்போன் நிறுவனங்களின் செல்போன் டவரகளின் திறனை தற்காலிகமாக மேம்படுத்த வேண்டும்.

அதற்கான, தொழில் நுட்ப வல்லுநர் குழுவை அனுப்பி போர்க்கால அடிப்படையில் இந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதிக திறன் மிக்க தற்காலிக செல்போன் டவர்களை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். தீபத்திருவிழா தேரோட்டம் நடைபெறும் நாள் முதல் கார்த்திகை தீபத் திருவிழா முடிந்து பவுர்ணமி கிரிவலம் நிறைவடையும் வரை செல்போன் டவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவர் அவர் தெரிவித்துள்ளார்.

---


**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | த.பொ. / செ / வடக்கு | C-223 | 1 |
| 2 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | 172 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5198/ஒப்பந்தப்புள்ளி/2024



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மத்திய வட்டாரம் / இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களால் குறுகிய மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது (ஒப்ப விதிகளின்படி)**

**இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1 / 358A / 2024**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 09, லாரி நிலையத்திற்கு 365 நாட்களுக்கு 6 ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவது (ஒப்ப விதிகளின் படி)**

முன்வைப்புத் தொகை : **Rs.27,000/-** ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **09.12.2024 மதியம் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **10.12.2024 மதியம் 3.30 மணி**

மேலும் விபரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

செ.ம.தொ.இ / 5203 / ஒப்பந்தப்புள்ளி / 2024 — **கண்காணிப்பு பொறியாளர் (மத்தியம்)**